**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி அவர்கள்.*

*முற்பகல் 10-25*

**திருமதி பொன். சரஸ்வதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோயில்களில் அன்னதானத் திட்டத்தினைத் தொடங்கி ஆன்மிகத்தை நிலைநாட்டி, அகிலத்தின் அன்னபூரணியாக. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், உயர் கல்வி சம்பந்தப்பட்ட வினாவில் அறநிலையத் துறை தொடர்பான கேள்வியைக் கேட்கிறீர்களே?*

*வினா வரிசை எண் 104, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. மாரியப்பன் கென்னடி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**104—**

**குளிர்பதனக் கிடங்கு**

***2015—திரு. சோ. மாரியப்பன் கென்னடி:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மானாமதுரை தொகுதியில் மிளகாய்க்கென குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களை வணங்குகிறேன்.*

*மாண்புமிகு மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மானாமதுரை தொகுதியில் மிளகாய்க்கென குளிர்பதன சேமிப்புக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளார்கள். மானாமதுரை தொகுதியில் மிளகாய்க்கென குளிர்பதன சேமிப்புக் கிடங்கு அமைக்கும் திட்டம் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2016 ஆகஸ்ட் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. மாரியப்பன் கென்னடி அவர்கள்.*

**திரு. சோ. மாரியப்பன் கென்னடி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாய் தன்னை மகன் மறந்தாலும், பிள்ளையைப் பெறும் தாய் மறந்தாலும், கற்ற நெஞ்சகம் கலை மறந்தாலும், கண்கள் நின்று இமைப்பது மறந்தாலும், உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும், உயிரை மேவிய உடல் மறந்தாலும், தமிழகத்தையும், தமிழக மக்களையும் அரை வினாடியும் மறவாமல் கட்டிக் காத்து வருகின்ற எங்கள் தமிழர் குல சாமி, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) எனது வினாவினைத் துவங்குகிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110-ன்கீழ் மானாமதுரையில் உள்ள தானியங்களை சேமித்து பாதுகாத்திட ரூ.3 கோடி மதிப்பீட்டில் சேமிப்புக் கிடங்கும், திருப்புவனம் வைகையாற்றில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் தடுப்பணையும், மானாமதுரை-தஞ்சாவூர் சாலை, வேலூர் கிராமத்தில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் ஓடைப் பாலமும் ஆக மொத்தம் ரூ.15 கோடிக்கு நிதியை ஒப்பளித்து, பதவியேற்று மூன்றே மாதங்கள் முடிவடைந்த நிலையில், மானாமதுரை தொகுதிக்கு பல நல்ல திட்டங்களை அறிவித்த விவசாயிகளின் பாதுகாவலர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மானாமதுரை சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பில் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளையான்குடி பகுதியில் 8,750 ஏக்கர் நிலப்பரப்பில் மிளகாய் பயிரிடப்பட்டு வருகிறது. மிகவும் புகழ்பெற்ற குண்டு மிளகாய், சாரா மிளகாய், லைலா மிளகாய் போன்றவை பயிரிடப்படுகின்றன. விலை குறைவாக இருக்கும் காலங்களில் குளிர்பதனக் கிடங்கில் சேமித்துவைத்துப் பயன்படுத்தினால் நிறம் மாறாமல் அதே தரத்துடன் இருக்கும். விலை அதிகமாக விற்பனையாகும் காலங்களில் விற்பனை செய்து விவசாயிகள் இலாபம் அடைவர். நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியில் சராசரியாக ஆண்டுதோறும் 3,800 ஹெக்டேர் பரப்பளவில் மிளகாய் பயிரிடப்பட்டு, சுமார் 5,400 மெட்ரிக் டன் அளவுக்கு உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் சுமார் 3,800 மெட்ரிக் டன் அளவுக்கு உபரியாக உள்ளது. மிளகாய் உள்ளூர் மற்றும் வெளியூர் வியாபாரிகளிடம் உடனடியாக விற்பனை செய்யப்பட்டுவிடுவதால், அதிக அளவில் இருப்பு வைத்து விற்பனை செய்ய வேண்டிய நிலை எழவில்லை. மிளகாய் பயிரிடும் விவசாயிகளின் நலன் கருதி, தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மானாமதுரையிலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பரமக்குடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் மிளகாய்க்கென ரூபாய் 99 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 100 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள குளிர்பதனக் கிடங்கை அமைத்துள்ளார்கள். இதுவரை சுமார் 332 மெட்ரிக் டன் மிளகாய் சேமிக்கப்பட்டுள்ளது. மேலும், மானாமதுரையிலிருந்து 57 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள எட்டிவளி கிராமத்தில் ஒருங்கிணைந்த மிளகாய் வணிக வளாகத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்ட நிதி ரூ.5,11,25,000/- மற்றும் இராமநாதபுரம் விற்பனைக் குழு நிதி ரூ.5,11,25,000/-, ஆக மொத்தம் ரூ.10,22,50,000/- மதிப்பீட்டில் 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இது தவிர, மானாமதுரையிலிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கமுதி, 62 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அருப்புக்கோட்டை மற்றும் 70 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சிங்கம்புணரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் தலா ரூ.31,80,000/- மதிப்பீட்டில் தலா 25 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள குளிர்பதனக் கிடங்குகள் ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் அமைக்கப்பட்டு, விவசாயிகளின் பயன்பாட்டில் உள்ளன என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 ஆகஸ்ட் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. மாரியப்பன் கென்னடி அவர்கள்.*

**திரு. சோ. மாரியப்பன் கென்னடி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் நலன் காக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு அடுத்த நிதியாண்டிலாவது பரிசீலனை செய்ய வேண்டும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 105, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**105—**

**புதிய வட்டம்**

***3864—திருமதி மு. சந்திரபிரபா:**

*மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*